07.03.2026

MC.14/2022

PW–1, கற்பகம் (எ) அனிதா

**எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு சாட்சியம் சொல்ல அனுமதிக்கப்படுகிறார்.

நான் தற்போது எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். எனது பெற்றோரின் சொந்த வீடு என்றால் சரிதான். எனது அத்தியாவசிய செலவுகள் மற்றும் மற்ற செலவுகளை எனது பெற்றோர்கள் தான் பார்த்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது நான் தனியாக சென்று வீடு எடுத்து குடும்பம் நடத்த தேவையில்லை என்றால் சரிதான். திருமணத்திற்கு முன்னாடியும் பின்னாடியும் நான் வேலைக்கு சென்றேனா என்றால் சென்றேன். ஆனால் அது நிரந்தரமாக இல்லை. நான் நிரந்தரமாக வேலைக்கு செல்ல நான் பி.டெக் முடித்துள்ளேன் என்று சொன்னால் சரிதான். ஆனால் எனது திருமண வாழ்வில் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக என்னால் வேலைக்கு செல்லமுடியவில்லை. கடந்த 7 வருடமாக நான் வேலைக்கு செல்லாததற்கு உடல் ரீதியான காரணங்கள் உண்டா என்றால் மன ரீதியாக பாதிப்பு ஏற்பட்டதால் வேலைக்கு செல்லமுடியவில்லை. மனரீதியான பாதிப்பால் நான் எதிர்மனுதாரர் மீது விவாகரத்து வழக்கு போட்டேன் என்றால் எதிர்மனுதாரர் என்னை நிர்பந்தித்தால் விவாகரத்து வழக்கு போட்டேன். இந்த விபரத்தை நான் எனது விவாகரத்து மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லவில்லை. நான் இந்த வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. மாதம் ரூ.30,000/– செலவாகிறது என்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் பள்ளிக் கேண்டினில் வேலை செய்கிற விபரம் தெரியுமா என்றால் போன வாய்தாவில் தான் விசாரணையில் எனக்கு தெரியவந்தது. நானும் நேரடியாக சென்று விசாரித்தேனா என்றால் விசாரித்தேன். அதே வாய்தா தேதியில் தான் எதிர்மனுதாரர் மாதம் ரூ.15,000/–ம் வாங்கிறார் என்ற விபரம் தெரியும் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் வசிக்கும் வீடு அவரது பெற்றோர் வீடா என்றால் சரிதான். அந்த சொத்தில் எதிர்மனுதாரருக்கு

தனிபட்ட உரிமை உள்ளதா என்றால் உள்ளது. அந்த சொத்தானது கூட்டுக்குடும்ப சொத்து என்பதால் அவரால் தனிப்பட்ட முறையில் விற்கமுடியாது என்றால் சரியல்ல. எனது விருப்பப்படி தான் தற்போது நான் எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன் என்றால் தவறு. எதிர்மனுதாரரின் பிரச்சினையால் தான் தற்போது எனது பெற்றோருடன் வசித்து வருகிறேன். கடந்த 7 வருடமாக எனது விருப்பத்தின்பேரில் தான் எனது பெற்றோருடன் இருக்கிறேன் என்றால் எனது கணவருடன் ஏற்பட்ட பிரச்சினையால் தான் வசித்து வருகிறேன். எனது கணவருடன் சேர்ந்து வாழ ஏதேனும் வழக்கு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஆனால் பெரியவர்கள் மூலம் பேச்சு வார்த்தை நடத்தினோம். தேதி ஞாபகம் உள்ளதா என்றால் ஞாபகம் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல. நா ன் இதே நீதிமன்றத்தில் எனது கணவர் அழைத்தபோது நான் வாழவர மறுத்துவிட்டேன் என்றால் சரியல்ல. தற்போது நான் எதிர்மனுதாரருடன் வாழ தயாரா என்றால் தயாராக இல்லை. ஏனென்றால் அவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் உள்ளார். எனது கணவர் வேறு ஒரு பெண்ணுடன் தொடர்பில் இருந்ததற்காக ஆதாரம் இருந்ததா என்றால் இல்லை. நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

நான் என்னுடைய பொருட்களை எல்லாம் மதுரை தல்லாகுளம் காவல் நிலையத்தில் வைத்து வாங்கி கொண்டேன் என்றால் இல்லை. அங்கு என்னை அடித்துகொடுமைப்படுத்தியதாக சம்பந்தாக புகார் கொடுத்து விசாரணை நடந்தது. விசாரணை முடிந்து அவர் மீது வழக்கு தாக்கல் செய்யப்பட்டதா என்றால் இல்லை. நகை மற்றும் பொருட்களை வாங்கி கொண்டேனா என்றால் எனது கணவர் பிஸ்னஸ் செய்வது சம்பந்தமாக ஏற்கனவே 10 பவுன் கொடுத்துவிட்டேன். அதனால் நான் முழுவதுமாக அவரிடம் இருந்து வாங்கவில்லை. அந்த 10 பவுனானது நான் சேர்ந்து வாழ்ந்த போது எனது கணவரிடம் கொடுத்தேனா என்றால் சரிதான். அதன் பிறகு தான் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன் என்றால் சரிதான். அந்த புகாரில் 10 பவுன் குறித்து நான் சொல்லியுள்ளேன் என்றால் சொல்லவில்லை. நான் உண்மையில் அனைத்து நகைகள் மற்றும் பொருட்களை வாங்கி கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல.

எதிர்மனுதாரரின் 5 பவுன் செயின் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். எனது குழந்தையை எதிர்மனுதாரர் பார்க்கவோ பராமரிக்கவோ நான் அனுமதிக்கவில்லை என்று சொன்னால் நான் ஏற்கனவே நீதிமன்றத்தில் குழந்தையை கூட்டி வந்தேன். ஆனால் எதிர்மனுதாரர் தான் குழந்தையை பார்க்கவில்லை. நான் அடுத்த வாய்தாவில் குழந்தையை கூட்டி வந்து எதிர்மனுதாரருக்கு காண்பிக்க விருப்பமா என்றால் எனது குழந்தைக்கு சம்மந்தமா என்றால் எனக்கு சம்மந்தம். அவ்வாறு நீதிமன்றத்தில் குழந்தையின் விருப்பத்தை கேட்க சம்மந்தமா என்றால் சம்மந்தம். குழந்தையின் பள்ளிக்கட்டணத்தை காண்பிக்கக்கூடிய ஆவணங்கள் எதையும் நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் வழக்கறிஞரிடம் கொடுத்தேன். எனது குழந்தை தற்போது 1ம் வகுப்பு ஸ்ரீ அரபிந்தோ மீரா யுனிவர்சல் பள்ளியில் படித்து வருகிறார்.

நான் கேட்ட பரிகாரம் எனக்கு கிடைக்கதக்க அல்ல என்றால் சரியல்ல.